Available online at www.jilile.in ISSN: 3048-4952
JOURNAL OF INDIAN LANGUAGES
AND INDIAN LITERATURE IN ENGLISH
*Journal of Indian languages and Indian literature in English*, 03(02), 250-257; 2025

# கூகை நாவலும் எல்லைக்கோட்டு நிலையும்

மு. முத்துமாரி,
பதிவு எண்: MKU22PF0L10343
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625 021

நெறியாளர்: முனைவர் செ. கிளிராஜ்,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சிவகாசி

Submission Date:13.03.2025
Acceptance Date:24.03.2025

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் வாழும் நிலையே நிலையற்றது. அவர்கள் வாழும் முடிவை எல்லைக்கோட்டு நிலையாக இருந்தலியக் கொள்கை வெளிப்படுத்துகிறது. ஒரு மனிதன் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு மரணம் என்பது தீர்வு ஆகாது. மனிதன் சுதந்திரமாக வாழ முடியாது தவிக்கும் போது மனிதன் எடுக்கும் முடிவானது பிறரை காயப்படுத்தாமல் துணிந்து வாழ்வது சுதந்திரமாகும். இயற்கை இயந்து வாழும் மக்களின் நிலையை சோ.தர்மன் அவர்கள் கூகை நாவலின் வாழ்வற்றைத் தவிக்கு தொழிலாளர் வர்க்கத்தினரை முதலாளித்துவ வர்க்கத்தினால் எவ்வாறெல்லாம் துன்பப்படுத்துகிறார்கள் என்பதை கண்டித்து அவர்களை மனித

நேயத்துடன் நடத்தப்பட வேண்டு;ம் என்பதை உணர வேண்டும். இனத்தால் ஒடுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் படிப்படியாகத் தங்களுக்குள் நாமும் மனிதர்கள் தான் என்பதையும் தாங்களும், மற்ற மனிதர்களைப் போல மனித நேயத்துடன் நடத்தப்பட வேண்டும் என்று கருதுகின்றார். காலம் காலமாக மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான தன்மதிப்பை எவ்வாறு கடைபிடிக்கும் எல்லைக் கோட்டின் தமிழக கலாச்சார பண்பாடு ஆகியவற்றால் மாறி வாழ்கிறான்.

**முன்னுரை:**

இருத்தலியல் தத்துவம் பலவிதமான முன்னோக்குகளை உள்ளிடக்கியது. ஆனால், அதுசில அடிப்படைக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறது. இருத்தலியல் வதாத்தின் ஒரு மையக் கோட்பாடு, தனிப்பட்ட சுதந்திரம் தனிப்பட்ட பொறுப்பு மற்றும் வேண்டுமென்றே தேர்வு ஆகியவை சுய கண்டுபிடிப்பு மற்றும் வாழ்க்கையின் பொருளைத் தீர்மானிப்பதற்கு இன்றியமையாததாகும் 'அபத்தமும் எல்லைக் கோட்டு நிலையும்' இருத்தலியல் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்க கருத்தடைவுகளாகும்.. இவ்வபத்தம், எல்லைக் கோட்பாட்டு நிலை பற்றிய இருத்தலியலாளர்கள் கருத்துக்களை விளக்குவதோடு பார்வைக்குட்பட்ட தமிழ்ப் புதினங்களில் அபத்தம் அபத்தவாழ்க்கை பதிவு செய்யப்பட்டுள்ள? என்றும் எல்லைக் கோட்டு நிலை என்ற இருத்தலில் கருத்தாக்கம் எத்தன்மையில் இடம்பெறுகின்றது என்பதையும் விளக்குவதாகவும் சோ.தர்மனின் கூகை நாவலில் இடம்பெறும் அபத்தங்களையும் வாழ்வியல் எல்லைக்கோட்டு நிலையையும் விளக்கும் விதமாக இவ்;வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**இருத்தலியல் பற்றிய அபத்தம்:**

அபத்தத்தின் கருத்து பல இருத்தலியல் படைப்புகளில் குறிப்பாக காமுஸில் விஷயங்களுக்கு இடையிலான வேறுபாட்டின் கருத்தாகும். காமுஸ் இதை,

“மனித தேவைக்கும் உலகின் நியாயமற்ற அனாதிக்கும் இடையிலான இந்த மோதலில் இருந்து அபத்தம் பிறக்கிறது” 1

தி.மித் ஆஃப் சிசியஸில்

என்று கூறுகிறார்.

ஜீன் பால் சார்த்தரால் பகிர்ந்து கொள்ளப்படும் இந்தக் கருத்து என்னவென்றால், மனித குலம் அவர்களுக்கு எதிராகவோ அல்லது அலட்சியமாகவோ இருக்கும் ஒரு உலகில் வாழ வேண்டும். உலகில் நாம் விரும்பும் விதத்தில் மனிதகுலத்தை ஒருபோதும் உண்மையிலேயே கவனித்துக் கொள்ளாது. இந்த அறிக்கையின் நாத்திகக் கருத்து என்னவென்றால், மக்கள் கதைகளையோ அல்லது கடவுள்களையோ உருவாக்குகிறார்கள், அவை அவர்களின் மனதில் யதார்த்தத்தை மீறி இந்த வெற்றியிடத்தை நிரப்பி அவர்களின் தேவையை பூர்த்தி செய்ய முயற்சிக்கின்றன.

அபத்தத்தை உள்ளடக்கிய தத்துவம் அபத்தம் என்று குறிப்பிடப்படுகிறது. அபத்தம் இருத்தலியல் பார்வைக்கு அவசியமில்லாத ஒரு குறிpப்பிட்ட யோசனையாகும். இந்தக் கோட்பாட்டையே ஆணவமாகக் கருதுகின்றனர். வாழ்க்கையின் நோக்கம் வெளிப்படையாக இல்லாவிட்டாலும், அது இல்லை என்பதை அது உறுதிப்படுத்தவில்லை என்று கூறுகிறார்கள் இருத்தலியலாளர்கள்.

அபத்தம் என்பது ‘Absural’ என்ற ஆங்கிலச்; சொல்லின் தமிழாக்கமாகும் இச்சொல்லின் அடிப்படைப்பொருள் இசையில் வழங்கப்படும் ‘ஆஸ்வரம்’ என்பதாகும் வழங்கப்படும் இச்சொல், இலக்கிய வழக்கில் இன்னும் ஆழமான பொருளுடையதாகக் கருதப்படுகிறது.

உணர்வுப்பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் வாழ்க்கையின் அர்த்தமின்மையைத் தெரிந்து கொள்ளும்போது வெளிப்படுவதுதான் அபத்த நிலை என்பதாகும்.

உலகப்போர் ஏற்படுத்திய பொருளாதார அழிவுகள், உயிர்பா போன்றவைகளால் நாம் வாழும் வாழ்க்கை நிலையானதல்ல அடுத்த நொடி பொழுது கூட நமக்கானது அல்லது என்பதை இருத்தலியலாளர்கள் மக்களுக்கு உணர்த்த வேண்டியுள்ளார்கள். மேலும் வாழ்க்கையே நிலையற்றது என்றும் பொருளற்றது என்ற முடிவுக்கு இருத்தலியலாளர்கள் வந்துள்ளனர்.

"மனிதன் எப்போழுதும் ஒரு அர்த்தமற்ற நிலையிலேயே (யுடிரளநன ளுவயவந) இருக்கிறான். பொறாமை, பேராசை, சுயநலம்; ஆகிய நிலைகளையே சந்திப்பதோடு அர்த்தமோ குறிக்கோளோ இல்லாத நிலைக்குத் தள்ளப்படுகிறான்" 2

(ந. பிச்சமுத்து. இலக்கிய இலக்கங்கள், ப.126)

என்று காம்யு கருதுவதாக ந.பிச்சமுத்து குறிப்பிடுகிறார்.

பொதுவாக, வாழ்க்கைக்கு நோக்கமோ, பொருளோ இல்லை என்பதை, உணர்ந்து கொள்ளும் நிலை அபத்தம் எனப்படுகிறது.

எல்லைக்கோட்டு நிலை குறித்த கருத்தாக்கங்கள்:

இருத்தலியலின் முக்கியக் கருத்தமைவுகளில் ஒன்றான எல்லைக்கோட்டு நிலை (டீழசனநச டிiநெ ளுவைரயவழைn) கார்ல் ஜாஸ்பர் என்பவர் விளக்குகிறார். "இக்கொள்கையின் படி எல்லைக் கோட்டு நிலையில் குறிப்பாகத் துன்பம், குற்றவுணர்வு, நோய், மரணம், சூன்யம் ஆகியவற்றிற்கு அருகில் இருக்கும் போது தான் மனிதன் தன் இருப்பின் உண்மைப் பொருளை விளங்கிக் கொள்ள இயலும் என்பதாகும் என்று,

எல்லைக்கோட்டு நிலை பற்றிய கார்ல் ஜாஸ்பரின் கருத்தினை Paul Roubicazek விளக்குகிறார்."[3]

(Paul Roubiczek, Existertialism for and againgt, P.137)

சோ. தர்மனின் கூகை நாவலின் அபத்த பதிவுகள்:

சோ. தர்மனின் கூகை என்ற நாவலில் அப்புசுப்பன், பேச்சியின் வாழ்க்கையில் நடைபெறும் துன்ப நிலைகளை வெளிப்படுத்துவதே அபத்தம் எனப்படும்.

இன்றைய சமுதாயம் மிகுந்த ஏற்றத் தாழ்வுகளுடன் காணப்படுகிறதென்பதால் அதற்கு காரணம் முதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளித்துவ மக்களைச் சுரண்டி வாழ்வதேயாகும். நாம் வாழும் வாழ்க்கை நமக்குச் சொந்தமில்லை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். நம் சந்ததியினரின் எதிர்கால வாழ்க்கை நலனுக்குகாக முதலாளித்துவ வர்க்கத்தின் தொழிலாளர் வர்த்தினரிடம் உழைப்பைச் சுரண்டி சுயநலமாக வாழும் நிலையும் ஒரு அபத்தம்தான்.

"கூகையைத் தலக்காட்ட விடாம மத்த பறவைகள் விரட்டுவது மாதிரி வொட்டி அடிச்சிறாங்க, இல்லனா இன்ன ஜாதிறு தெரிஞ்சிட்டா அப்படியே வல்லின ஒன்று சொன்னது மாதிரி கடைக்கே போகா நின்றாங்க. கடையைத் தொறந்;து வச்சிட்டு ஈ அடிச்சிட்டு இருந்தா கஞ்சி எப்படி குடிக்கிறது? காலமெல்லாம் ஊராறுக்கே ஒழச்சு சீரழிய வேண்டியதான். பொறந்தா நல்ல ஜாதியில பொறக்கனும் பள்ள ஜாதியாலும் பிற ஜாதியிலயும் பொறந்து இப்படி சீரழியக் கூடாது"[4]

(சோ. து .கூ.ப. 303)

என்று சோ. தர்மன் கூறுகிறார். மனிதவாழ்வில் மனிதனால் உண்டாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டு சகமனிதர்களை வேறுபடுத்தி அவர்களின் துன்பநிலையை முதலாளித்துவத்தினர் தனக்கு

சாதகமாக மாற்றுவதும் ஒரு அபத்தம் என்ற இருத்தலியலாளர்கள் கருத்து வெளிப்படுகின்றது.

**கூகையும் எல்லைக்கோட்டு நிலையும்:**

அறம் என்பது மனிதம் வாழும் வரை பிறர் உயிர்களிடத்தில் துன்பம் ஏற்படுத்துதல் கூடாது என்பது தான். ஆனால் இருத்தலியலாளர்கள் எல்லைக்கோட்டு நிலையின் அறமானது மனிதனுக்கு எப்போதும் எது வேண்டுமானாலும் நடக்கலாம் அவனின் ஒவ்வொரு செயலுக்கும் அவனே பொறுப்பேற்க முடியும். ஆகையால் அவன் வாழும்போது எதிர்காலத்தை எண்ணி வாழாமல் நிகழ் காலத்தை மட்டுமே எண்ணிவாழ்வது இருத்தலியலின் கருத்தாகும்.

மேலும் உலகில் ஆயிரம் கல்கோள் வந்தாலும் நோய்கள் வந்து மனிதன் மடிந்தாலும் சரி மரணம் பற்றிய கருத்து மனிதன் மனதின் இரண்டு நாட்கள்; தான். மனிதன் மனிதனாக எண்ணி மறந்த காலமே இன்றைய காலம் என்பதை சோ. தர்மன்.

“ஆலமரத்தடியில் கூட்டாமான கூட்டம் அம்மாசியை மரத்தின் கட்டி வைத்து அடி அடியென்று அடித்தத் துவைக்கிறார்கள் ஓம் மகன் எங்கள் ராஸ்கல்? சொல்லை, இப்பக் கொளுத்திட்டு ஆட்டுக்கூட ஒன்னயும் பொதச்சிடுவமம்…” ‘ஒன்னய கொல்லத்தான்டா போறம், அவளை எங்க? சாட்டையின் விலாசலில் கன்னிப்போய் இந்த கோடுகள் விரித்த உடம்புடன் அம்மாசி தண்ணீர் தண்ணீர் என்று கதறினான்”[5]

(சோ.த.கூ., பக். 181 – 182)

என்று கூறியதிலிருந்து முதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளித்துவ வர்க்கத்தினரை சித்ரவதை படுத்தும்போது விலங்குகள் கூட தன் இனத்தை பாதுகாக்கும் என்ற எண்ணம் தான் வரும் ஆனால் மனிதனோ தன் உறவுகளையும் தனக்கு நிகரான சுக மனிதர்களையும் துன்பப்படுத்து

இன்புறும் கொடிய நிலையைக் கண்ட இருத்தலியலாளர்கள் இன்றும் காலமுடியவில்லை என்பதை நினைவுப்படுத்துகிறார்கள்.

மரணம் என்கிற எல்லைக்கோடு சோ.தர்மனுக்குப் புதிய முயற்சியைக் கொடுகிறது. தன் வாழ்வில் கண்ட உண்மைப் பொருளை அறிந்தவராக பெரும் வேகத்துடன் எழுதியுள்ளார்.

அம்புச்சுப்பன் தான் அருந்ததியர்கள் பன்றிகளைத் திருடினான் என்று அம்மக்களிடம், பொய்யான புகாருக்குச் கையெழுத்து வங்கியதை அம்மக்கள் பேச்சியிடம் கூறி வருந்தினர்.

“மொட்டக் கையெழுத்து போடுறியா ஒதைக்கவானு போலீஸ் மெரட்டுது. போடலனா ஒத வாங்கனும் எல்லார்த்தையும் புடிச்சு உள்ள தள்ளடுவம்னு தெனமும் தெருவுல வந்து மெட்றான். போலீசோட தொந்தரவு அலப்பறையும் தங்கள் மாட்டமாத்தன் கையெழுத்துப் போட்டோம் கோர்ட்ல வெசாரணைக்கு வரட்டும் தாயி, எல்லாரும் ஒன்றுபோல எங்களுக்குத் தெரியாது, அப்புச்சுப்பய்யா எங்கள் பன்னிகா வாங்கல் மெட்டப் பேப்பர்ல இருக்கிற கையெழுத்து எங்கள் மெரட்டி பணம் வாங்கலனு சொல்லிடுவோம், எங்கள மெரட்டி வாங்குன கையெழுத்துனு சொல்லிட்டா போலீஸ் அப்ப என்ன செய்யும், அதனால எங்கமேல கோபப்படாதிங்க, வருத்தப்படாதிங்க, எங்கநெலம் அப்பிடி” [6]

(சோ.த.கூ.ப.304)

என்று கூறுவதிலிருந்து வாழவும் முடியாமல் விழவும் முடியாமல் தொழிலாளர் மக்களே தங்களுக்குள் ஒருவருக்கொருவர் மீது புகார் செய்து மோதிக்கொள்ளட்டும் என்ற நிலையினையும் முதலாளித்துவ வர்த்தகத்தினரால் நசுக்கப்படும் நிலையினை இருத்தலியலாளர்கள் கூறும் எல்லைக்கோட்டு நிலை என்று கூறப்படுகிறது.

முடிவுரை:

சோ. தர்மன் கூகை நாவலின் கரிசல் வட்டார மக்கள் முதலாளித்துவ வர்க்கத்தினாரால் நசுக்கப்பட்டு பல்வேறு துன்பங்களை அனுபவித்து வாழும் நிலையினை அபத்த நிலையில் உள்ள விவசாயிகளின் அபத்த நிகழ்வுகளை கூறும் பாங்கிலும், இந்த உலகில் வாழும் வாழ்க்கை எதுவும் நிரந்தரமில்லை, எல்லாமே எல்லோர்க்கு சமம் என்பதை வலியுத்தும் எல்லைக் கோட்டு நிலையையும் எடுத்துக்கூறும் ஆய்வுக்கட்டுரையாக விளங்குகிறது.

அடிக்குறிப்புகள்:

1. தி.மித் ஆஃப் சிசியஸில்
2. ந. பிச்சமுத்து. இலக்கிய இலக்கங்கள், ப.126
3. Paul Roubiczek, Existertialism for and againgt, P.137
4. சோ.தர்மன் கூகை ப. 303
5. சோ.தர்மன் கூகை பக். 181 - 182
6. சோ.தர்மன் .கூகை ப. 304